அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்.23/2016
தேதி. 24.01.2016

# மூன்று மாணவிகள் மரணம்
# தீவிர விசாரணை வேண்டும்
# மாணவிகள் குடும்பத்திற்கு இழப்பீடு வழங்க வேண்டும்
# ச.ம.க.நிறுவனர் தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ அறிக்கை

விழுப்புரம் மாவட்டம் சின்ன சேலம் அருகே உள்ள பங்காரம் கிராமத்தில் இயங்கி வந்த இயற்கை மருத்துவம் மற்றும் யோகா கல்லூரி மாணவிகள் சென்னையைச் சேர்ந்த மோனிஷா, செய்யாறு மாணவி சரண்யா, திருவாரூர் மாணவி பிரியங்கா ஆகியோர் மர்மமான முறையில் மரணமடைந்த செய்தி அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது.

இந்நிகழ்வை நாம் எளிதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. மாணவர்கள் சமுதாயத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக இருக்கிறது. மாணவிகளின் தலையில் வெட்டுக்காயம் இருப்பது மேலும் வேதனை அளிக்கிறது. மாணவிகளை இழந்த பெற்றோர்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். தங்களது பிள்ளைகள் படித்து பட்டம் பெற்று தங்களது எதிர்கால வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் கல்லூரிக்குப் படிக்க அனுப்பிய பெற்றோர்களுக்கு எவ்வளவு பெரிய வேதனையைத் தரக்கூடிய விஷயம்.

அந்த மாணவிகளின் உயிரிழப்பிற்கு காரணம் என்ன என்பதைக் கண்டறிந்து அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுத்து உரிய தண்டனை வழங்க வேண்டும். உயிரிறந்த மாணவிகளின் குடும்பங்களுக்கு சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இறந்த மாணவிகளின் குடும்பங்களுக்கு தகுந்த இழப்பீடு வழங்க வேண்டும் என்று தமிழக அரசை கேட்டுக்கொள்கிறேன்.

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ,
தலைவர்.